DEPOSITION OF WITNESS

( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)

***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.1 MADURANTAKAM

Calender : CC 131/2023

Miscellaneous :

Sessions : PW 23

Deposition of Witness for

**எதிரி ஆஜரில்லை எதிரி தரப்பில் 355 BNSS ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.**

| | |
|---|---|
| Name | ராமகிருஷ்ணன் |
| Father / Husband Name | முனுசாமி |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of 14.05.2026

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது படுவூர் கிராமத்தில் வசித்து கொத்தனார் வேலை செய்து வருகிறேன். இந்த வழக்கு விபத்தில் இறந்துபோன கோகுல் என்பவர் என் மாமா மகன். 27.01.2023 அன்று என்னுடைய உறவினர்கள் அனைவரும் வேலச்சேரி திருமணத்திற்கு வேனில் வந்தார்கள். அவர்களுடன் என்னுடைய மாமா மகன் கோகுல் என்பவர் அந்த வேனில் வந்தார். அவர்கள் கருங்குழி அருகே வரும்போது அவர்கள் வந்த வேனின் முன் டயர் வெடித்த விபத்து ஏற்பட்டதாக என் அக்கா எனக்கு தொலைப்பேசி மூலம் தகவல் சொன்னார். நான் செங்கல்பட்டு அரசு மருத்துவமனையில் சென்று பார்த்தபோது அவருக்கு கை, வயிறு மற்றும் நெஞ்சு பகுதியில் அடிபட்டு இறந்துவிட்டார். அவரது பிரேதத்தின் மீது போலிசார் விசாரணை செய்தார்கள், அதற்கு நான் சாட்சியாக இருந்தேன். போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

2. விபத்து குறித்து எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். இறந்துபோன கோகுல் என்பவரின் பிரேதத்தை விசாரணை செய்ய போலிசார் கேட்டுக்கொண்டதன் பேரில் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். இறந்தவர் என்னுடைய உறவினர் என்பதால் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.